# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2 Date : 29.08.2024

Case No. : **O.S. 494/2019** Nationality : Indian

Name : வினோத்கண்ணா (கிராம நிர்வாக அலுவலர், துகிலி கிராமம்) Religion :

Age : 33

Father's/Husband's Name :

Village :

Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா துகிலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள்.204/2, 204/3, 204/4 மற்றும் 204/5 ல் கண்ட சொத்துக்களுக்கான சிட்டா, அடங்கல், புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டினை எடுத்து வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தநல்லூர் கிராமம் புல எண்கள் 248/2 மற்றும் 248/6 ல் கண்ட சொத்துக்களுக்கான "அ" பதிவேடு , அடங்கல் பதிவேடு, சிட்டா பதிவேடு மற்றும் புல வரைபடம் ஆகியவற்றிற்கான அசல் பதிவேடுகளை எடுத்து வந்துள்ளேன். மேற்படி அசல் பதிவேடுகள் எங்கள் அலுவலக அன்றாட பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் அதன் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். மேற்படி புல எண்கள்.204/2, 204/3, 204/4 மற்றும் 204/5 ல் கண்ட சொத்துகளுக்கான " அ " பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்துகளுக்கான சிட்டா பதிவேட்டின்

உண்மை நகல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்துகளுக்கான புல வரைபடத்தின் உண்மை நகல் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்துகளுக்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாசாஆ 2 சிட்டா ஆவணத்தில் மேற்படி சொத்துக்கள் வாதிகளின் பெயரில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாசாஆ 4 அடங்கல் ஆவணத்தில் மேற்படி சொத்துக்கள் ஜெயலெட்சுமி வகையறா பெயரில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாசாஆ 1 "அ" பதிவேட்டில் மேற்படி சொத்துகள் கோவிந்தராஜ் பெயரில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**).

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.